ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2015/47 - 2017 අප්‍රේල් මස 19 වැනි බදාදා - 2017.04.19
2015/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கெபிராலே/அத்3/1/81.
பிரதேச செயலாளரின் இல. : 4-3/6/20114/எச். டபிள்யு/466.

ஒரு பகிரங்கத் தேவைக்கு (பாமங்கடை- ஹொரனை பாதையை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல் கி. மீ. 5+640 தொடக்கம் 5+800 வரையான பாதையின் ஒரு பகுதி சம்பந்தமாக) வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 533ஏ, ரத்னபிடிய கிராம அலுவலர் பிரிவில் ரத்னபிடிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2017.03.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கொ. 9689ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 0.0757 ஹெக்டயார் விஸ்தீரணமான காணித் துண்டுகள் (3) மூன்றின் விபரங்கள்:-

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர் : கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 1 இன் காணி (ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம் மற்றும் நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. டீ. எஸ். பிரணாந்து, இல. 1, ஜீ. எச். பெரோ மாவத்தை, ரத்னபிடிய, பொரலஸ்கமுவ; விஸ்தீரணம்: 0.0035 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர்: தவடகஹகும்புர; விபரம்: வீட்டுத்தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்செய்கை காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு (வெருஸ்ஆறு மழை நீர் வடிகால் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி திட்டத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கொ9468 இன் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 13 இன் ஒரு பகுதி) ; விஸ்தீரணம்: 0.0366 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 03**
காணியின் பெயர்: தவடகஹகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு (வெருஸ்ஆறு மழை நீர் வடிகால் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி திட்டத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கொ9468 இன் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 15, 16,17 மற்றும் 18 இன் ஒரு பகுதி); விஸ்தீரணம் : 0.0356 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி

1A - G 25442 - 14 (2017/04)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மு.ப. 9.30 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எஸ். கே. கண்ணங்கர,
பதில் பிரதேச செயலாளர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கெஸ்பேவ,
2017, ஏப்பிறல் 04.

5 - 117

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.